செ.வெ.எண்: 989/2017 நாள்: 23.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**

**ஓகி புயலினால் பாதிக்கப்பட்ட அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் திட்டப்பணிகள் மற்றும் பயிர் பாதிப்பு பகுதிகளை வேளாண்மை இயக்குநர் திரு, வ. தட்சிணாமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைத்துறை இயக்குநர், திரு. வ. தட்சிணாமூர்த்தி இ.ஆ.ப., அவர்கள், வேளாண்மைத்துறை திட்டப்பணிகளை ஆய்வு செய்ததுடன், சமீபத்தில் தாக்கிய ஓகி புயல் பாதிப்பினால் ஏற்பட்டுள்ள பயிர் சேதம் குறித்த கணக்கெடுப்பு பணிகளை இன்று (23.12.2017) நேரில் ஆய்வு செய்தார்.

வேளாண்மை இயக்குநர் ஆய்வின் போது, ஓகி புயல் போன்ற எதிர்பாராத இடர்பாடுகள் ஏற்படும் காலங்களில், விவசாயிகளுக்கு முழுமையான இழப்பீடு பெற பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் வழிவகை செய்வதாக தெரிவித்ததோடு, வரும் பருவங்களில் விவசாயிகள் அதிக அளவில் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்திட தீவிர நடவடிக்கை மேற்கொள்ள களப்பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து சுசீந்திரம், வடக்குதாமரைகுளம், பறக்கை, திருப்பதிசாரம் ஆகிய கிராமங்களில் நெல் பாதிப்படைந்த வயல் பகுதிகளை பார்வையிட்டார். அதன்பின் திருப்பதிசாரம் அரசு விதைப்பண்ணை பணிகளை ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது வேளாண்மை இணை இயக்குநர் பி. பாண்டியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு. நிஜாமுதீன், வேளாண்மை துணை இயக்குநர்கள், திரு. ராஜகுமார் மற்றும் திரு. புருசோத்தமன் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**